සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | | |
|---|---|---|
| කර්ණාටක සංගීතය I<br>கர்நாடக சங்கீதம் I<br>Carnatic Music I | 55 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** "வாரண முகனே வரதனே..." எனத் தொடங்கும் மலஹரி இராகத்தில் அமைந்த உருப்படி வகை யாது?
(1) கீர்த்தனை (2) பதம் (3) இலட்சணகீதம்
(4) சஞ்சாரிகீதம் (5) தேவாரம்

**2.** சங்கிலியன் பாடல், சத்யவான் - சாவித்ரி பாடல் என்பன எவ்வகையைச் சேர்ந்தவை?
(1) நாட்டுக்கூத்துப் பாடல் (2) இசைநாடகப் பாடல் (3) விவசாயப் பாடல்
(4) பக்திப் பாடல் (5) மெல்லிசைப் பாடல்

**3.** ஆதிதாளத்தில் இரண்டாம் கால கற்பனாஸ்வரம் பாடும்போது ஒரு ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் ஸ்வரங்களின் எண்ணிக்கை யாது?
(1) 16 (2) 32 (3) 44 (4) 64 (5) 72

**4.** ஹிந்துஸ்தானி இசையிலிருந்து கர்நாடக இசைக்கு வந்த தாளம்
(1) திஸ்ர துருவம் (2) திரிதால் (3) கண்ட சாபு
(4) தேசாதி (5) சங்கீர்ண சாபு

**5.** கலப்பு இராகம் எனப்படுவது யாது?
(1) சுத்த இராகம் (2) கனபஞ்சக இராகம்
(3) சாயாலாக இராகம் (4) திவித்தீயகனபஞ்சக இராகம்
(5) சங்கீர்ண இராகம்

**6.** "கருணைக்கழல் பாடித் தென்னா தென்னா..." என்ற பாடல் வரி அமைந்துள்ள பாடல் பகுதி எது?
(1) திருத்தெள்ளேணம் (2) திருவெம்பாவை (3) திருத்தசாங்கம்
(4) திருப்புகழ் (5) திருச்சதகம்

**7.** "நீ போய் அழைத்துவாடி..." என்னும் பதம் அமைந்துள்ள இராகம்
(1) ஹமீர் கல்யாணி (2) கீரவாணி (3) கரஹரப்ரியா
(4) ஹரிகாம்போஜி (5) காபி

**8.** பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து இசைப்பணி செய்த ஈழத்துக் கத்தோலிக்கப் புலவர் யார்?
(1) இணுவில் சின்னத்தம்பிப் புலவர் (2) காமாட்சி சுந்தரம்
(3) பரராஜசேகர மன்னர் (4) குப்பிளான் செல்லத்துரை
(5) பூலோகசிங்க முதலியார்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



9. "கோபிகாமனோஹரம்..." என்னும் கீர்த்தனையில், இயற்றியவரின் முத்திரை இடம்பெறும் பகுதி
(1) பல்லவி
(2) எத்துக்கடை பல்லவி
(3) சரணம்
(4) சமஷ்டி சரணம்
(5) சிட்டைஸ்வரம்

10. மோகன இராகத்தில் வரும் க, ப, த ஸ்வரங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) அல்பத்துவ ஸ்வரங்கள்
(2) அம்ச ஸ்வரங்கள்
(3) அபன்னியாசம்
(4) நியாச ஸ்வரங்கள்
(5) லங்கணம்

11. திருப்புகழை இயற்றியவரின் சிறப்புப் பெயர் யாது?
(1) புகழ்ப்பாவலன்
(2) சந்த இசை வல்லோன்
(3) சந்தப்பாவலர் பெருமான்
(4) திருப்புகழ் வேந்தன்
(5) பெருமாள் நாயனார்

12. நாட்டைக் குறிஞ்சி எவ்வகையான இராகம்?
(1) சம்பூர்ண ஔடவ இராகம்
(2) ஔடவ ஷாடவ இராகம்
(3) சம்பூர்ண ஷாடவ இராகம்
(4) ஷாடவ ஔடவ இராகம்
(5) ஷாடவ சம்பூர்ண இராகம்

13. இரண்டு களையாக ஒரு காலத்தில் மட்டும் பாடப்படும் உருப்படி யாது?
(1) பதவர்ணம்
(2) பதஜதி வர்ணம்
(3) தருவர்ணம்
(4) மத்யமகாலக்ருதி
(5) தானவர்ணம்

14. "தேவி நீயே துணை..." எனத் தொடங்கும் கீரவாணி இராகக் கீர்த்தனையின் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்பவை ஆரம்பிக்கும் ஸ்வரங்கள் முறையே
(1) ஸ், ஸ், ம்
(2) ஸ், ஸ், த
(3) ஸ், ரி, நி
(4) ஸ், நி, ஸ்
(5) ஸ், ரி, ப

15. திருவிசைப்பா, பெரியபுராணம் என்பன பாடப்படும் இராகங்கள் முறையே
(1) ஆனந்தபைரவி, மத்யமாவதி
(2) நீலாம்பரி, மோகனம்
(3) மோகனம், ஆனந்தபைரவி
(4) ஆனந்தபைரவி, ஆரபி
(5) ஆகிரி, மத்யமாவதி

16. ஷேத்ரக்ஞர் தனது பதங்களில் பயன்படுத்தியுள்ள முத்திரை யாது?
(1) முவ்வபுரிதாஸ
(2) முவ்வகோபால
(3) கோபாலதாஸ
(4) ஷேத்ரபால
(5) கோபாலதாமுடு

17. திருவாவடுதுறை இராஜரத்தினம்பிள்ளை அவர்கள் வாய்ப்பாட்டிசையின் நுணுக்கங்களை யாரிடம் பயின்றார்?
(1) குப்புசாமிபிள்ளை
(2) திருவாடுதுறை மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(3) திருமங்கலம் கிருஷ்ணய்யர்
(4) திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர்
(5) செம்பை வைத்தியநாத பாகவதர்

18. மெல்லிசைப் பாடல்களை இனங்காணத்தக்கதாக அதில் காணப்படும் அம்சம் யாது?
(1) மெல்லினச் சொற்களைக் கொண்டிருத்தல்
(2) கீர்த்தனை வடிவில் அமைந்திருத்தல்
(3) சிக்கலான தாளத்தில் அமைந்திருத்தல்
(4) இறைவனைப் பாடுவதாக மட்டும் அமைந்திருத்தல்
(5) எளிமையான இசைவடிவில் அமைந்திருத்தல்

[பக். 3 ஐப் பார்க்க

**19.** கண்டஜாதி மட்டியதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையினை உடைய தாளங்களின் தொகுதி
(1) சங்கீர்ணஜாதி ரூபகதாளம், சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம்
(2) மிஸ்ரஜாதி துருவதாளம், சங்கீர்ணஜாதி ரூபகதாளம்
(3) சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம், சதுஸ்ரஜாதி அடதாளம்
(4) சதுஸ்ரஜாதி துருவதாளம், மிஸ்ரஜாதி அடதாளம்
(5) கண்டதாளம் அடதாளம், சங்கீர்ணஜாதி ஜம்பைதாளம்

**20.** "சரஸ்வதி விதியுவதி..." எனத்தொடங்கும் கீர்த்தனை அமைந்துள்ள இராகமும் மொழியும் முறையே
(1) கீரவாணி, தமிழ் (2) ஹிந்தோளம், சமஸ்கிருதம்
(3) ஹிந்தோளம், தெலுங்கு (4) கீரவாணி, தெலுங்கு
(5) ஷண்முகப்பிரியா, சமஸ்கிருதம்

**21.** பின்வருவனவற்றுள் ஓர் இசைக்கச்சேரியில் பாடகரின் மனோதர்மத்தினை மதிப்பிடுவதற்குப் பொருத்தமான பகுதி
(1) வர்ணம் (2) கீர்த்தனை
(3) இராக ஆலாபனை (4) தில்லானா
(5) பதம்

**22.** செம்பை வைத்யநாத பாகவதரால் எம். எல். வசந்தகுமாரிக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டம் யாது?
(1) சங்கீதரத்னாகரம் (2) திருப்பாவைமணி (3) சங்கீதவாணி
(4) சங்கீதகலாநிதி (5) பத்மபூஷண்

**23.** "ராதாவதன..." எனத் தொடங்கும் அஷ்டபதி அமைந்துள்ள இராகத்தின் வர்ஜ ஸ்வரங்கள் யாவை?
(1) அந்தரகாந்தாரம், காகலி நிஷாதம்
(2) சதுஸ்ருதி ரிஷபம், சுத்த தைவதம்
(3) சுத்த மத்திமம், கைஷிகி நிஷாதம்
(4) சாதாரண காந்தாரம், சதுஸ்ருதி தைவதம்
(5) பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம்

**24.** 'தனியாவர்த்தனம்' என்பது கலைஞனின் எத்திறமையை வெளிப்படுத்துகின்றது?
(1) இராகஞானம் (2) பொருளுணர்ச்சி
(3) தாளஞானம் (4) மொழியறிவு
(5) பாடுந்திறன்

**25.** தனது மகளுக்காக 'Little Book for the keyboard' எனும் நூலை இயற்றிய மேலைத்தேய இசைமேதை யார்?
(1) பாக் (2) மொஹாட் (3) தான்சேன்
(4) கிரிஸ்தோபர் (5) பீதோவன்

**26.** நாட்டார் பாடல்களின் முக்கிய பண்பாகக் கொள்ளத்தக்கது
(1) பாடலாசிரியரது விபரம் பற்றிய குறிப்புகள் காணப்படல்
(2) வாய்மொழி மரபாக அமைந்திருத்தல்
(3) இலக்கணக் கட்டுப்பாட்டு முறையில் அமைந்திருத்தல்
(4) நீண்ட காப்பிய மரபாக அமைந்திருத்தல்
(5) ஸ்வரங்களும் ஜதிகளும் அமைந்திருத்தல்

**27.** பின்வரும் இராகங்களுள் பஞ்சம வர்ஜ இராகங்களின் தொகுதி
(1) ஸாவேரி, வஸந்தா, ஸாரங்கா (2) வஸந்தா, ஸாவேரி, ஸ்ரீரஞ்சனி
(3) ஹம்சத்வனி, ஆபோகி, வஸந்தா (4) ஆனந்தபைரவி, ஆபோகி, ஆரபி
(5) வஸந்தா, ஆபோகி, ஸ்ரீரஞ்சனி

**28.** ஒரே தேவாரத்தில் இருவேறு தலங்களைக் குறிப்பிட்டு திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட தேவாரம்
(1) "பொன்னும் மெய்ப்பொருளும்..." (2) "காதலாகிக் கசிந்து..."
(3) "வீடலால வாயிலாய்..." (4) "மைம்மரு பூங்குழல்..."
(5) "தோடுடைய செவியன்..."

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



- **29, 30** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் ஸ்வர அலங்கார ஆவர்த்தனத்தினைக் கருத்திற் கொண்டு விடை தருக.

ஸா ; ரீக ஸரீ ; கா மா; மா; ||

**29.** இந்த ஆவர்த்தனம் எத்தாளத்திற்குப் பொருத்தமானது?
(1) திஸ்ரஜாதி அடதாளம் (2) கண்டஜாதி துருவதாளம்
(3) மிஸ்ரஜாதி அடதாளம் (4) மிஸ்ரஜாதி மட்டியதாளம்
(5) கண்டஜாதி அடதாளம்

**30.** இந்த அலங்கார வடிவத்தில் மூன்றாவது ஆவர்த்தனமாகக் கொள்ளக்கூடியது
(1) கா ; மாப கமா ; பா தா ; தா ; ||
(2) ரீ ; காம ரிகா ; மா பா ; பா ; ||
(3) கா ; மபா கமாபா ; தா ; தா ; ||
(4) காமா ; ப கமா ; பா தா ; தா ; ||
(5) ரீகா ; ம ரிகா ; மா பா ; பா ; ||

**31.** முத்துஸ்வாமி தீட்சிதரால் யமுனாகல்யாணி என்னும் ஹிந்துஸ்தானி இராகத்தில் இயற்றப்பட்ட உருப்படி
(1) "கீததுனிகி..." (2) "நந்த கோபால..."
(3) "அகிலாண்டேஸ்வரி..." (4) "ஸமரஸ்னக..."
(5) "ஸ்ரீ ஸத்ய நாராயணம்..."

**32.** சாஸ்திர ரீதியாக ஏற்பட்ட இலட்சணத்துடன் ஒரே இராகத்தில் வரும் கோமள தீவிர பேதங்கள் **வராத** இராகம் யாது?
(1) ஸாலக இராகம் (2) கனபஞ்சக இராகம்
(3) ஸங்க்ரம இராகம் (4) கன இராகம்
(5) சுத்த இராகம்

**33.** கோபாலகிருஷ்ண பாரதியாரால் வராளி இராகத்தில் இயற்றப்பட்ட பஞ்சரத்தினக் கீர்த்தனை யாது?
(1) 'மறவாமல் எப்படியும்...' (2) 'பிறவாத வரம் தாரும்...'
(3) 'ஹர ஹர சிவ சங்கர...' (4) 'ஆடிய பாதமே கதி...'
(5) 'சரணாகதமென்று...'

**34.** பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரால் இயற்றப்பட்ட 16 இராகங்களில் அமைந்த இராகமாலிகைக் கீர்த்தனையைப் பாடிப் புகழ்பெற்ற இசைக்கலைஞர் யார்?
(1) ஏரம்பு சுப்பையா (2) எம். டி. இராமநாதன்
(3) மஹாராஜபுரம் சந்தானம் (4) ரி. எம். சௌந்தரராஜன்
(5) ருக்மணி அருண்டேல்

**35.** ரொக் (Rock) சங்கீதத்தில் பிரபல்யமானதும் நீண்டநேரம் நிறுத்தி வாசிக்கக்கூடியதுமான கிற்றார் வகை யாது?
(1) பேஸ் கிற்றார் (2) ரிதம் கிற்றார் (3) லீட் கிற்றார்
(4) எலக்ரிக் கிற்றார் (5) பொக்ஸ் கிற்றார்

**36.** ஹமீர்கல்யாணி இராகத்தின் ஆரோகண - அவரோகணங்கள் முறையே
(1) ஸமகமபதநிஸ் - ஸ்நிதநிபகாமரிஸ (2) ஸபமபதநிஸ் - ஸ்நிதநிபகாமரிஸ
(3) ஸகரிகமபதநிஸ் - ஸ்நிதநிபமரிஸ (4) ஸபமபதநிஸ் - ஸ்நிதநிபமரிஸ
(5) ஸமகமதநிஸ் - ஸ்தபகாமகரிஸ

**37.** தவில்மேதை வி. தட்சணாமூர்த்தி அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பான பட்டம்
(1) லயஞானவினோதன் (2) லயஞானகேசரி
(3) லயஞானபூபதி (4) லயவாத்தியபதி
(5) லயஞானகுபேரபதி

[பக். 5 ஐப் பார்க்க

**38.** பின்வரும் ஸ்வரக் கோர்வைகளுடன் தொடர்புடைய கூற்றுக்களைக் கருதுக.

கபநிஸ் நிப கபகரி ஸரிகா ||
ரிகபநி ஸ்ரி க்ரிஸ்நி பநிஸா ||

A - ஹிந்தோள ராகத்தில் அமைந்துள்ளது.
B - சதுஸ்ர நடையில் அமைந்துள்ளது.
C - சதுஸ்ரஜாதி துருவதாளத்தில் அமைந்துள்ளது.
D - நான்கு தாரஸ்தாயி ஸ்வரங்களைக் கொண்டுள்ளது.
E - மொத்த அட்சரங்கள் 28 ஆகும்.

சரியான கூற்றுக்களைத் தெரிவுசெய்க.
(1) A, B, D (2) A, C, E (3) B, C, E (4) B, D, E (5) C, D, E

**39.** பரியாய முத்திரையைக் கொண்ட வாக்கேயகாரர்
(1) மகாவைத்தியநாதய்யர்
(2) பைடாலகுருமூர்த்தி சாஸ்திரி
(3) ஸ்வாதித்திருநாள் மகாராஜா
(4) தியாகராஜ ஸ்வாமிகள்
(5) முத்துஸ்வாமி தீக்ஷிதர்

**40.** ஒரு இராகத்தைப் பல பாகங்களாகப் பிரித்துப் பாடும்போது அப்பாகங்களில் அடிக்கடி இராகத்தின் விளக்கம் வரும்படி பாடப்படும் ஸ்வரம்
(1) தாரம்
(2) சன்னியாசம்
(3) அபன்னியாசம்
(4) வின்னியாசம்
(5) பகுத்துவம்

**41.** "ஔவை அகவல் கேட்டு அகமும் குளிர்ந்தனை..." என்னும் பாடல் வரிகளைக் கொண்டமைந்துள்ள கீர்த்தனை
(1) "தேவி நீயே துணை..."
(2) "ஞானம் அருள்வாய்..."
(3) "பாஹிமாம் ஸ்ரீ..."
(4) "பார்வதி நாயகனே..."
(5) "உனையல்லால்..."

**42.** ஓர் இராகத்தைப் பாடும்போது ஒரு ஸ்வரத்தை இடைவிடாமல் ஒலிக்கும்படி பாடுவது
(1) அப்பியாசம் (2) அலங்கனம் (3) அம்சம் (4) தாரம் (5) நியாசம்

**43.** "பாவயாமி..." என்னும் சாவேரி இராகத்தில் அமைந்த இசை உருப்படியை ஆறு இராகங்களைக் கொண்ட இராகமாலிகையாக அமைத்து வழங்கியவர் யார்?
(1) திருவாங்கூர் ரங்கநாத பாகவதர்
(2) ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர்
(3) ஏ. எம். சின்னசாமி முதலியார்
(4) சுப்பராம தீட்சிதர்
(5) செம்மங்குடி ஸ்ரீநிவாஸ ஐயர்

**44.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - அனேக லக்ஷண கீதங்கள், சஞ்சாரி கீதங்கள், பிரபந்தங்களை சமஸ்கிருத மொழியில் இயற்றியவர்.
B - ஹிந்துஸ்தானி இசையில் துருவபதங்கள், கசல்கள் போன்றவற்றை இயற்றியவர்.
C - கூடால சேஷய்யர், சோபனாத்ரி ஆகியோர் இவரது பிரதான சிஷ்யர்களாவர்.
D - இவரது பூதவேதாள வகுப்புப் பாடல்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை.
E - கனநய தேசியம் பாடும் முறையில் சிறந்த வித்துவானாக விளங்கியவர்.

இவற்றுள் பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகளுடன் தொடர்புடைய கூற்றுக்கள் யாவை?
(1) A, B, D (2) A, C, E (3) A, D, E (4) B, C, D (5) C, D, E

**45.** பின்வரும் ப்ருந்தாவனி இராகத் தில்லானாவின் அனுபல்லவியைக் கருதுக.
தீம்ன நா தீம்ன நா ததிங்கிணதொம்
................ ..................... தஜம்த தஜம்த
இதிலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான ஜதிச் சொற்கள் யாவை?
(1) தகிடஜம் தஜம்
(2) தகிடதாம் தஜம்
(3) தஜம்தரி தஜம்தரி
(4) தகிடதாம் தரிதஜம்
(5) தஜம் த தஜம்த

[பக். 6 ஐப் பார்க்க


**46.** "வலசி வச்சி..." என்னும் இராகமாலிகை வர்ணத்தில் முதலாவது சரண ஸ்வரம் ஸ்வர தாளக் குறிப்புடன் தரப்பட்டுள்ள சரியான தெரிவு யாது?

(1) பா, மா, கா, ரீகா, ரீ | ஸா, பா, தா |,ஸாரீ மா ம ||
(2) பா, மா, கா; ரீ, கா ரி | ஸா, பா, தா | ; ஸா, ரீ, ம ||
(3) பா, மா, கா; ரீ காரீ | ஸா, பா, தா | ;ஸா, ரீ ம ||
(4) பா, மா, கா; ரீ கா ரீ | ஸா, பா, தா | ;ஸா, ரீ ம ||
(5) பா, மா, கா, ரீ கா ரீ | ஸா, பா, தா |,ஸா ; ரீ ம ||

**47.** ஸ்வாதித்திருநாள் மகாராஜாவின் மேலைத்தேய இசை ஈடுபாட்டை வெளிப்படுத்தும் உருப்படி

(1) பாவயாமி இராகமாலிகை
(2) நெரநம்மி - கானடா இராக அடதாள வர்ணம்
(3) பன்னகேந்திர சயன இராகமாலிகை
(4) சலமேல - சங்கராபரண இராக அடதாள வர்ணம்
(5) தனாஸ்ரீ தில்லானா

● **48** தொடக்கம் **50** வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தினைக் கருத்திற் கொண்டு விடை தருக.




**48.** இவ்வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள ஸ்வரஸ்தானங்களுக்குரிய இராகம் யாது?

(1) ஆபோகி
(2) மோகனம்
(3) ஹம்ஸத்வனி
(4) ஆனந்தபைரவி
(5) ஸ்ரீரஞ்சனி

**49.** இவ்வரைபடம் குறிக்கும் ஸ்வர சஞ்சாரம் யாது?

(1) நிஸ் - நிதம - நிதமநித - நிஸ்நித - மகஸ
(2) தஸ் - தபக - ரிகரிஸரி - ஸரிகப - கரிஸ
(3) தப - ஸ்நித - பமகரிஸ - கரிஸம - கரிஸ
(4) தஸ் - பதஸ் - தபமகரி - மபதப - கரிஸ
(5) தஸ் - மதஸ் - தமகரிஸ - மகதம - கரிஸ

**50.** இவ்வரைபடம் குறிக்கும் இராகத்தின் ஆரோகணம் - அவரோகணம் என்பன யாவை?

(1) ஸகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ
(2) ஸரிகமதஸ் - ஸ்தமகரிஸ
(3) ஸகமதநிஸ் - ஸ்நிதமகஸ
(4) ஸரிகபதஸ் - ஸ்தபகரிஸ
(5) ஸரிகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **'அ'** பகுதியில் உள்ள முதலாம் வினாவுக்கும் **'ஆ'** பகுதியில் இருந்து **ஒரு** வினாவிற்கும் **'இ'** பகுதியில் இருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## 'அ' பகுதி

**1.** (i) "உன்னையன்றி..." எனத் தொடங்கும் தானவர்ணத்தினை இயற்றியவர் யார்?

(ii) பல்லவி பாடுதலில் அறுதிக்குப் பின்னர் வரும் கார்வை இடைவெளியை எவ்வாறு அழைப்பர்?

(iii)  எனும் குறியீடு குறிக்கும் தாள அங்கத்தின் பெயரைத் தருக.

(iv) ஹிந்துஸ்தானி இசையில் பூர்விதாட்டிற்கு ஒப்பான கர்நாடக இசை இராகம் யாது?

(v) நவரஸ கன்னட இராகத்தினுடைய தாய் இராகத்தின் மேள எண் யாது?

(vi) கதக் நடனத்திற்குப் பக்கவாத்தியமாக வாசிக்கப்படும் ஹிந்துஸ்தானிய நரம்பு வாத்தியம் யாது?

(vii) "ஆரபிமானம் வைத்து..." எனும் இராகமாலிகையின் சரணத்தில் வரும் இராகங்களின் எண்ணிக்கை யாது?

(viii) ஸ்வரப்பலகையில் (keyboard) ஒரு Octave இல் மொத்தம் எத்தனை வெள்ளை நிற ஸ்வரக்கட்டைகள் உள்ளன?

(ix) ஒரு பாடலில் இடம்பெறும் சொல், ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது எவ்வாறு அழைக்கப்படும்?

(x) 'குல்பானா' என்னும் ஹிந்துஸ்தானி இசை உருப்படி வகையினை அறிமுகப்படுத்தியவர் யார்?

(xi) விவாதி தோஷத்திற்கு உட்பட்ட மேளராகங்களைக் கொண்ட **இரண்டு** சக்கரங்களின் பெயர்களைத் தருக.

(xii) இசைப்புலவர் என். சண்முகரத்தினம் அவர்கள் இசையாசிரியராகப் பணிபுரிந்த பாடசாலைகள் **இரண்டின்** பெயர்களைத் தருக.

(xiii) கெஞ்சிரா வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான கலைஞர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக.

(xiv) ஸ்வாதித்திருநாள் மகாராஜா இயற்றிய ஹரிகதைகள் **இரண்டினைத்** தருக.

(xv) இலங்கையின் கதாப்பிரசங்க வளர்ச்சிக்குப் பங்காற்றிய **இருவரின்** பெயர்களைத் தருக.

(20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

## 'ஆ' பகுதி

2. ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த இசை வல்லுனர்கள் பல்வேறு வகையான கமகங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.
   (i) 'கமகம்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)
   (ii) கமகம் பற்றிக் குறிப்பிட்ட **ஐந்து** இசை வல்லுனர்களையும், அவர்களால் குறிப்பிடப்பட்ட கமகங்களின் எண்ணிக்கைகளையும் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)
   (iii) தற்காலத்தில் பயன்படுத்தப்படும் **பத்து** வகையான கமகங்களும் யாவை? (05 புள்ளிகள்)
   (iv) மேலே (iii) இல் குறிப்பிட்டவற்றுள் எவையேனும் **எட்டு** வகைக் கமகங்களை உதாரணங்களுடன் விளக்குக. (08 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.
   (i) சூளாதியின் இலட்சணங்கள்
   (ii) நாட்டியக் கச்சேரிகளின் இறுதியில் இடம்பெறும் உருப்படி
   (iii) ஹிந்துஸ்தானி உருப்படி வகைகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

## 'இ' பகுதி

4. தேவாரமூவர்களின் திருமுறைகள் பற்றியும் அவர்கள் பயன்படுத்திய பண்கள் பற்றியும் விவரிக்குக. (20 புள்ளிகள்)

5. பின்வரும் இராகங்களுள் எவையேனும் **இரண்டினைத்** தெரிவு செய்து, அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)
   (i) 'திசி - ஸ்ரீ' எனக் குறிப்பிடப்படும் இராகம்
   (ii) ஹிந்தோளம்
   (iii) சம்பூர்ண ஆரோகண அவரோகணத்தைக் கொண்ட பாஷாங்க இராகம் (10 × 2 = 20 புள்ளிகள்)

6. இசைக்கருவிகள் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   (i) நாதம் உற்பத்தியாகும் முறையைக் கொண்டு இசைக்கருவிகளை வகைப்படுத்தி, ஒவ்வொன்றிற்கும் இவ்விரு உதாரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)
   (ii) உபயோகங்களை அடிப்படையாகக் கொண்டு இசைக்கருவிகளை வகைப்படுத்தி, ஒவ்வொன்றிற்கும் இவ்விரு உதாரணங்களைத் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) பின்வரும் ஒவ்வொரு வாத்திய வகை தொடர்பாகவும் சுருக்கமாக விளக்கி, அவை ஒவ்வொன்றிற்கும் இரண்டு உதாரணங்கள் வீதம் தருக.
      (அ) உபதாள வாத்தியம்
      (ஆ) நிஷ்கள வாத்தியம்
      (இ) ஸ்திர வாத்தியம்
      (ஈ) ஏகத்வனி வாத்தியம்
      (உ) தேவாலய வாத்தியம் (02 × 5 = 10 புள்ளிகள்)

7. கர்நாடக இசை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய வேங்கடமகி தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   (i) வேங்கடமகி தொடர்பான பின்வரும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களைத் தருக.
      (அ) பிறப்பிடமும் வாழ்க்கைக் காலமும்
      (ஆ) பெற்றோர், இயற்பெயர்
      (இ) இளமைக் கல்வி (03 புள்ளிகள்)
   (ii) இவர் இயற்றிய நூலினைக் குறிப்பிட்டு, இராகங்களை முழுமையாக அறிவதற்கு அவர் குறிப்பிடும் சாதனங்கள் **நான்கினையும்** தருக. (03 புள்ளிகள்)
   (iii) இவர் பயன்படுத்திய முத்திரைகள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)
   (iv) இவர் இயற்றிய நூலில் சுருதி, ஸ்வரம், மேளம், இராகம், கீதம், பிரபந்தம் ஆகிய தலைப்புக்களில் விளக்கியுள்ளவற்றைக் குறிப்பிடுக. (12 புள்ளிகள்)

8. மேலைத்தேய இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பீதோவன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது இசைத் தொண்டினையும் ஆராய்க.

**அல்லது**

இருபதாம், இருபத்தோராம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் இசை வளர்ச்சி பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
www.PastPapers.WiKi

* * *

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library